REGISTERED AS A NEWSPAPER IN GEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ கார்த்திகை மீ கூஉ (1947 நவம்பர் 21 வெள்ளிக்கிழமை) [ இல கூஉ

## ஸ்ரீ பஞ்சாக்கர மகிமை

[ சைவமணி ]

சிவபெருமானுக்குரிய திருமந்திரமாகவும் மந்திரங்களுக்கெல்லாம் நாயகமாகவு மிருப்பது நமசிவாய என்னும் திருவைந்தெழுத்து. இது சித்தையறிதற்கு ஆதாரமாயிருத்தலினால் சிவமூலமந்திரம் எனப்படும். (மன்: நினைப்பவன். திர: காத்தல்.) யாவனொருவன் யாதொருமந்திரத்தைக் கிரமமாய்நினைப்பானோ அவனை அம்மந்திரம் காக்குமென்பது மந்திரம் என்னும் சொல்லால் அறியக்கிடக்கின்றது.

மந்திரமானது சடமாயிருத்தலால் சித்துப்பொருள்களாகிய உயிர்களை அது எவ்வாறு காக்குமெனில், மந்திரங்களெல்லாம உயிர்களின் நன்மையைநாடி, பலவகையான அக்ஷரங்களால் நாதரூபமாய் பிரதம சிருட்டியிலேயே உண்டாக்கப்பட்டிருத்தலாலும், அவ்வக்ஷரங்களெல்லாம் சிவசத்திசொரூபமென்று வேதாகமங்களில் சொல்லப்படுகின்றமையாலும், அவ்வக்ஷர சொரூபியாகிய சிவசத்தியே அம் மந்திரங்களை யதிட்டித்து உயிர்களைக் காக்குமென்க.

மந்திரம் வாசகமந்திர மென்றும் வாச்சியமந்திர மென்றும் இருவகையாகச் சொல்லப்படும். இவற்றுள் வாசகமந்திரமாவது அக்கரங்களாகிய உறுப்புக்களோடுங்கூடி உயிர்கள் உச்சரிக்குமாறு நாதாகாரமாய்விளங்குவது. அதில் அதிட்டானமாய் நின்று பலன்கொடுக்கும் அருட்சத்தியே வாச்சியமந்திரம் எனப்படும்.

கரியினைத் துருத்தியினால் இடைவிடாது ஊதிவர அக்கினியானது அக்கரியினிடத்தே பிரகாசித்தல் போல், வாசகமந்திரத்தை அறிவைக்கொண்டு இடைவிடாது தியானித்துவர வாச்சியமந்திரமாகிய திருவருட்சத்தி தோன்றியருள்செய்யும். இதனைக் கருடோகம்பாவனையினாலும் உணரலாகும். கருடனானது ஆதிபௌதிகக் கருடன் எனவும், ஆதிதெய்விகக் கருடன் எனவும், ஆதியாத்மிகக் கருடன் எனவும் மூவகையாயிருக்கும். ஆகாயத்திற் பறக்கும் பறவையாகிய கருடன் ஆதிபௌதிகக் கருடன் எனவும், அக்கருடனையுணர்த்தும் அக்கரரூபமாகிய மந்திரம் ஆதிதெய்விகக்கருடன் எனவும், அம்மந்திரத்தை அதிட்டித்துநின்று மாந்திரிகனுக்குப் பலன்கொடுக்கும் அருட்சத்தி ஆதியாத்மிகக் கருடன் எனவும் சொல்லப்படும்.

கருடமந்திரம் கைவரப்பெற்றவன் தான் வேறு அக்கருடன் வேறு என்னும் பாவனையை யறவேயொழித்து, அக்கருடனே தானாக அனன்னியபாவனைசெய்துவந்த பயிற்சி விசேடத்தால், தன்னிடத்தில் ஆதியாத்மிகசத்தி பதியப்பெற்றவனாகின்றான். அதனால் அவன் உலகத்தில் விஷ நிவர்த்திசெய்ய வல்லவனாகின்றான். இவ்வாறே கருடனுக்கு மாத்திரமின்றி எல்லாப் பௌதிகப் பொருளுக்கும் மந்திரங்கள் உண்டு என்றும், அவற்றை யதிட்டித்துப் பலன்தருவது சிவசத்தியேயா மென்றும் உண்மை நூல்கள் உணர்த்துகின்றன.

ஒருவன் தன்னைக் கருடனாகப் பாவித்துக் கருடமந்திரத்தைத் தியானித்துவர அவனிடத்தில் ஆதியாத்மிக சக்தி பதிவதுபோல், சிவோகம் பாவனைசெய்து சிவமூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தைத் தியானித்தலால் திருவருட்சத்தி பதிந்து மும்மலவிடம் நீங்கும்.

இம்மந்திரங்களெல்லாம் எங்கே கூறப்பட்டுள்ளன வெனில், அனாதிமலமுத்த சித்துருவாகிய சிவபெருமானால் அனாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்களின் உச்சீவனார்த்தமாகப் பொதுவும் சிறப்புமா யருளிச்செய்யப்பட்ட நூல்களாகிய வேதாகமங்களிலேயேகூறப்பட்டுள்ளனவென்க. வேதம் சிவாகமம் என்னும் இவ்விரண்டினுள் சிறப்பு நூலாகிய சிவாகமமானது முற்றிலும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தையே தனக்காதாரமாகக் கொண்டு விளங்குவதுபோல, பொது நூலாகிய வேதமும் அத்திருவைந்தெழுத்தையே தனக்கு நாயகமும் தாயகமுமாகக்கொண்டு பிரகாசிக்கும். எவ்வாறெனில், வேதமானது இருக்கு யசுர்சாமம் அதர்வணம் என நான்காம். அவற்றுள், நாலாவதாகிய அதர்வணம் முதல் மூன்றனுள்ளே யடங்கியிருத்தலால், முதல் மூன்றுமே தனித்தனி விளங்குவனவாமென்றும், அதுபற்றியே வேதம் "த்ரயி" என்னப்பட்டது எனவும் சொல்லப்படும். யசுர் வேதமானது அம் மூன்றினுக்கு நடுவில் இருப்பதோடு மற்ற விரண்டினும் பலமாற்றானும் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. அந்த யசுர்வேதம் பன்னிரண்டு கண்டங்களாகப் பிரிந்து, எண்பதிரண்டு பிரசினங்களையுடையதாய், மாந்திரமெனவும், ப்ராம்மணமெனவும் இருவகைப்பகுதிபெற்று நிலவும். அப்பன்னிரண்டு கண்டங்களுள் மாந்திரம் என்னும் சம்மிதாபாகமாகிய ஏழு காண்டங்களே மற்றெல்லாவற்றினுஞ் சிறந்தனவாம். அவ்வேழனுள்ளும் நடுக்காண்டமே மிகச்சிறந்தது. அந்நடுக்காண்டம் ஏழுசம்மிதைகளையுடையது. நான்காவதாகிய நடுச் சம்மிதையின் மத்தியில் ஸ்ரீ ருத்திராத்தியாய மென்னும் சதருத்ரீய மந்திரம் பொலிவுபெற்று நிலவும். அந்தச் சதருத்திரீயத்தின் இருதயத்தில் நாயகத்தன்மை பூண்டு நமசிவாய என்னும் ஸ்ரீ பஞ்சாக்கரம் பிரகாசித்துக்கொண்டிருக்கு மென்பர். இவ்வுண்மையை

மும்மறையு ணடுமறையின் முனிவி
  லெழு காண்டத்துட்
செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்த
  வெழு சங்கிதையி
லம்மனடுச் சங்கிதையி னதியி
  னெழுத்தைந்தி னடுப்
பொம்மலுற வுயர்மனுவின் பொரு
  ளாவா னெவனமைந்த.

என்ற [illegible]

(வளரும்)

### பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

வருமிக்க மதயானை யுரித்தான் றன்னை
  வானவர்கோன் றோளனைத்து மடிவித் தானை
தருமிக்க குழலுமையாள் பாகன் றன்னைச்
  சங்கரனெம் பெருமானைத் தரணி தன்மேல்
உருமிக்க மணிமாட நிலாவு வீதி
  யுத்தமர்வாழ் தருமோமாம் புலியூர் மன்னும்
திருமிக்க வடதளியெஞ் செல்வன் றன்னைச்
  சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே.

—திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

## வாளேந்திய சிங்கக் கொடி

### அது தேசீயக் கொடியா?

சாவனை, தமிழ் இளைஞர் காங்கிரசின் 1-ம் வருடாந்தக் கூட்டம் சாவனை மத்திய ஐக்கிய பண்டகசாலைக்கு அருகாமையில், சென்ற தீபாவளித் தினத்தன்று இரவு 9–30 மணியளவில் கூட்டப்பட்டது. "கிராம முன்னேற்றம்" பற்றி இளைஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள், இலங்கையின் தேசீயக்கொடி எல்லாச் சாதியாருக்கும், எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவாக இருக்கவேண்டு மெனவும், வாளேந்திய சிங்கக் கொடியை தேசீயக் கொடியாக்க முயல்வதைக் கண்டித்தும், தமிழ்க் காங்கிரசை ஆதரித்தும்; சென்னையில் நடைபெறப்போகும் தமிழர் மகாநாட்டைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஸ்ரீ கோ நடேசய்யர் அவ

தொடர்ச்சி 4ம் பக்கம்

## திருக்கோணமலை

### இந்தியாவுக்கு அது வேண்டி வருமா?

திருக்கோணமலையைப் பிரிட்டிஷார் தம் தளமாகப் பாவிக்க இலங்கையரசாங்கம் சம்மதித்துவிட்டது. ஆனால் எமது அயற் கண்டமாகிய இந்தியா, தனதுதேவைக்கும் திருக்கோணமலை வேண்டுமென்றால் என் செய்வது? என்று எஸ். ஜே. வி. செல்வநாயகம் சென்ற திங்கட்கிழமை திருக்கோணமலையில் நிகழ்ந்த ஓர் கூட்டத்திற் கூறினார்.

சென்னைச் சட்டசபை யங்கத்தவராகிய ஸ்ரீ எஸ். ஏ. தேவநாயகம், ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி என்பவர்களும் தமிழ்நாடு காங்கிரஸ்சபை உபதலைவர் ஜனாப் வி. எம். ஒபயதுல்லா சாகிப் என்பவர்களும் அக்கூட்டத்திற் பங்குபற்றிப் பேசினர்.

ஸ்ரீ தேவசகாயம் பேசுகையில்,

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## முஸ்லீம் துரோகம்

### கண்டுபிடிக்கப்பட்டது

இந்திய அரசியல் நிர்மாணசபையில் முஸ்லிம்லீக் கட்சித் தலைவராயிருந்து இந்தியா விஷயத்தில், அங்கு உள்ள முஸ்லீம்கள் அனைவரும் விசுவாசமாக நடப்பார்கள் என்று உத்தரவாதம் கூறிய சௌத்ரிகாலிக்ஸ்மான் என்பவர், இப்போது இந்தியாவை விட்டு வெளியேறிப் பாகிஸ்தானுக்குத் தம் குடும்பத்தினருடன் சென்று அங்கே குடியேறிவிட்டார். அவருடைய தம்பி முஸ்லிஸ்மான் என்பவர் சென்றவாரம் லக்ஷ்மணபுரி விமானத்தளத்திலிருந்து கரைச்சிக்கு ஆகாசவிமான மூலம் பிரயாணம் செய்ய நின்றபோது அவர்மீது சந்தேகம் கொண்டுள்ள பொலிசார் அவருடைய பொருள்களைப் பரிசோதனை செய்தனர் அப்படிப் பரிசோதனைசெய்து பார்த்தபோது பல இரகசியக்கடிதங்களும் சாதனங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்தியாமீது விசுவாசமாக நடப்பதாகப் பிரமாணிக்கம் செய்துவிட்டு அங்கே உத்தியோகம் வகிக்கும் பல [illegible] உத்தியோகத்தர்கள் [illegible]மாகச் செய்துவரும் சூழ்ச்சிகள் அந்த இரகசியக்கடிதங்களாற் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து அவ்வரசாங்கத்துக்கு விசுவாசமாக இருப்பதாக நடித்து அங்கேயுள்ள இரகசியங்களை எல்லாம் கைப்பற்றிப்பாகிஸ்தானுக்கு அறிவிக்கவும், தக்க நேரத்தில், பாகிஸ்தானுக்கு உதவிபுரியவும் இந்தமுஸ்லீம உத்தியோகத்தர்கள் ஷெ கடிதங்களில் ஜின்னாவுக்கு உறுதி கூறியிருக்கிறார்கள். இவர்களுடன் ஓர் பிரிட்டிஷ் உத்தியோகத்தரும் சேர்ந்திருக்கிறார்.

கரைச்சியில் இருந்து லக்ஷ்மணபுரிக்கு வந்த சில முஸ்லீம் "பிரயாணிகளின்" பெட்டிகளைப் பொலிசார் சோதனையிட்டபோது, அங்கேயும் பல இரகசியச் சாதனங்கள் அகப்பட்டனவாம். இந்தியாவிலேகடமையாற்றும் முஸ்லீம் உத்தியோகத்தர் எந்தெந்த வகையில் இரகசியமாகப் பாகிஸ்தானுக்கு உதவிபுரியலாம், இந்திய அரசாங்கத்தின் இரகசியங்களை எப்படிப் பாகிஸ்தானுக்கு அறிவிக்கலாம் என்னும் இன்னோரன்ன கற்பனைகள் இந்த இரகசியச் சாதனங்களிற்காணப்பட்டனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஸு
கார்த்திகை ௬ வெள்ளிக்கிழமை

## இலங்கைப் புகைரதத்தின் ஈனநிலை

எங்கள் இலங்கைப் புகைரத ஸ்தாபனம், இந்தியாவைப் போல வியாபார சமுதாயத்தாரால் ஸ்தாபிக்கப்படலின்றி, அரசாங்க ஸ்தாபனமாக வுள்ளதென்பது எவருமறிந்த இரகசியம்; இலங்கைப் புகைரதம், தோன்றிய காலந்தொட்டு, இற்றைவரையில் எக்காலத்தேனும் இந்திய புகைரதம் மலாய் நாட்டுப் புகைரத ஸ்தாபனம் முதலியன அடைந்துள்ள உந்நத நிலைமையை யடைந்தது மில்லை; இப்போதைக்கு அடையப் போவதுமில்லை; இந்தப் புகைரத ஸ்தாபனத்தை நிர்வகித்து நடத்துவதற்குரியவர் பலராவர்,பாராளுமன்ற போக்கு வரத்து மந்திரியாருண்டு, அவர்க்குத் துணையுத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள்; இவர்களைவிட, புகைரதப் பகுதி மானேஜர் என்று ஒரு தலையுத்தியோகத்தர் இருக்கிறார்; இவருக்கு உதவி யுத்தியோகத்தர்களுளர்; இவர்களோடு புகைரத ஸ்தானதிபதிகளும் இலேககர்களுமாகப் பல ஆயிரத்திற்கு மேற்பட்ட மேல் உத்தியோகத்தர்கள் கீழ் உத்தியோகத்தர்கள் இன்னும் ஆயிரக்கணக்கான "போட்டர்கள்,' கூலிகள் முதலாகச் சொல்லப்பட்ட பணியாளரும் தக்க வேதனம் மாசந்தோறும் பெற்றுக்கொண்டு நன்கிருக்கிறார்கள்; புகைரத வருவாயோடு இலங்கையரசினரின் ஏனைய வருவாய்களிலும் ஒருபாகத்தை இதற்கென எடுத்துச் செலவிட்டாற்றானும் புகைரதப் பகுதிப் பரிபாலனம் இந்த நிலைமையிலேனும் நடைபெறுமென்று சொல்லப்படுகிறது.

யுத்தகாலத்திற் பல ஏதுக்கள் காரணமாகப் போக்கு வரத்துக் குன்றிப் பிரயாணிகளுக்குஇயன்றவரையிற் பயன்படாம லிருந்த இலங்கைப் புகைரதம், யுத்தம் முடிந்து சிலவருடங்கள் கழிந்தபின்னயினும் ஒருவாறு திருத்தமடைந்து பழைய நிலைமையையேனும் பெறுதோ என்றால், இப்புகைரதத்தின் நிலைமை "வர வர மாமியார் கழுதைபோலே" என்ற கதியைக் காலகதியில் அடையுமே என அஞ்சக் கிடக்கின்றது

யுத்தகாலம்போய்ச்சமாதான காலம் வந்தபின்னயினும் இலங்கைப் புகைரதப்பகுதியில் ஏதும் நன்மைக்கும் இலாபத்திற்குமாகிய திருத்தங்கள் நிகழுமா என்றால், இப் புகைரதத்தின் நிலைமை மாட்டு வால்போல் கீழ்நோக்கி நீளுகின்றது; புகைரதப் பிரயாணிகளுக்கு நேரக்கூடிய அசௌகரியங்கள் ஒன்றேனுந் தவறாமல், எங்கள் இலங்கை அரசாங்கப் புகைரதத்தில் நேரத் தலைப்பட்டுக்கொண்டன; புகைரதத்திற் களவு, உயிர்ச்சேதம் முதலாம் விபத்துக்கள் காலந்தோறும் அதிகப்படலாயின; அவற்றை யெல்லாம் இங்கே விரிவாக எடுத்துக் காட்டப்புகின் பத்திரிகையில் இடமும், புகைரதப் பிரயாணிகளுக்கு அச்சமும் அதிகப்படுமென அஞ்சுகின்றோம்; சென்ற வாரம் நேரவிருந்த ஒரு ஆபத்தைமாத்திரம் உதாரணமாக எடுத்துக் காட்டி விடுகின்றோம்:

சென்றவாரம் ஒருஇரவ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குச்செல்லும் புகைரதத் தொடரில், முதல் வகுப்பு வண்டியில் சுந்தரலிங்கம் எனப்படும் 14 வயதுச் சிறுவனொருவன் பயணம்பண்ணும்போது. காற்று உள்ளே வரும்பொருட்டோ, இல்லையேற் பொல்லாத காலத்தினலேயோ, தான் இருந்த பெட்டியின் கண்ணாடி யன்னலொன்றைத் திறந்துவிட்டுச் சிறிதுஉறங்கும்போது அந்த யன்னல்வழியே ஒரு திருடன் புகுந்து, உறங்கிக்கிடந்த சிறுவனுடைய கழுத்தை இறுகப் பிடித்தபடியே, ஏதும் சத்தமிடுவாயெனில் உன்னைச் கொன்றுவிடுவேனென்று தமிழிலேயே சொன்னனும்; சிறுவன் ஒருவாறு கள்ளனுடைய பிடியை விடுவித்துக்கொண்டு சத்தமிட, அடுத்த பெட்டியிலிருந்த பாராளுமன்றத்துப் பிரதிநிதிகளாகிய திருவாளர்கள் K. கனகரத்தினம், C. வன்னியசிங்கம் என்னுமிருவரும் அந்த ஒலத்தைக் கேட்டு உடனே அங்கே போய்விட, திருடன் இரதத்தை விட்டுக் குதித்து ஓட்டம் பிடித்தானும்; அத்திருடன் புகுந்த நோக்கம் அச்சிறுவனிடத்திலே திருடவல்லவாம்; அடுத்த வண்டியிற் பிரயாணஞ் செய்யும் ஒரு பெண்ணின் ஆடையாபரணங்களையும் ஏனையஉடைமைகளையும் திருடும் படியாகத்தானென்றுசொல்லப்படுகிறது. அன்று அந்தச்சிறுவன் ஓலமிடத்தவறினல் அச்சிறுவனுடையகதியென்ன? அடுத்தபெட்டியிற்பிரயாணஞ்செய்த பெண்ணின் கதியென்னவாய்முடிந்திருக்கும்; இதனை எதற்காக எடுத்துக்காட்டுகிறோமென்றால் இலங்கை அரசினர் புகைரதத்திலுள்ள பாதுகாப்பை விளக்குதற்காகும்.

நிலைமை இவ்வாறாக, இப்பொழுது புகைரதப்பகுதித் தலைவராயுள்ளவர், புகைரதப் பிரயாணிகளின் பயணச் செலவை இன்னமும் உயர்த்தி அறவிட வேண்டுமென்று பிரேரித்து நிற்கின்றார்; காரணம் புகைரதப் பகுதியில் ஆண்டுதோறும் வரவுக்குமேற்பட்ட செலவு நேர்தலேயென்கின்றார்; அவர் சொல்வது நிசம்; இப்பொழுது புகைரதப் பகுதியில் நேரும் திருட்டுத்தொழில் முதலாம் அநர்த்தங்களை விளையவொட்டாமற் றடுத்தற்குப் பாதுகாப்புப் பொலிசாரையும் புகைரதப்பகுதியார் நியமித்திருக்கின்றனரல்லவா? ஆனல் புகைரதப்பகுதி அதிகாரிகள் காலந்தோறும் புகைரதப் பிரயாணச் செலவை அதிகப்படுத்திக்கொண்டு போவரேல், புகைரதத்தை அபிமானிப்பாரின் தொகை குன்றக் குன்ற, அதன் வருவாய் மேலும் மேலுங் குறையுமே யல்லாமல், விருத்தியாகப்போவதில்லை யெனலாம்.

மேலும் இக்காலத்திலே மோட்டரதம் பஸ் என்னுமிவைகள் மூலமாகப் பிரயாணஞ் செய்வோர்தொகை அதிகப்படுவதற்குக் காரணமும், இந்தப் புகைரதத்தின் சீர்கேட்டு நிலைமையேயாகும்; புகைரத மூலமாகக் கொண்டுபோகப்படும் பொருள் பண்டங்களுக்கு விதிக்கப்படும் கூலியை உயர்த்திவிடலாமோவெனின், அப்படிப்பட்ட பொருள் பண்டங்களைக் குறைந்த கூலிக்குக் கொண்டுபோதற்காகிய 'லொறி'களும் இந்நாட்களில் உண்டு; அன்றியும், யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கு மிடையே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஆகாயரதப் போக்குவரத்துக் கிரமமாக நடைபெறத் தொடங்குமேல், புகைரத முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளின் தொகையும் குறையத் தலைப்படும்; புகைரதப்பகுதிச் செலவு அதிகப்படுதற்குக்காரணம் குறித்த மந்திரி முதலாம் மேலுத்தியோகத்தர்களுக்கு உதவப்படும் அளவுக்கு மேற்பட்ட மாசவேதனமேயாகுமென்றுஞ் சொல்லுகிறார்கள். இலங்கைப் புகைரதத்தை அரசினர் சிக்கனமான முறையை ஆராய்ந்து நடத்தினலொழிய, இப் புகைரதத்தால் நன்மையுண்டாகமாட்டாதெனலாம்.

●

## நம் தலைவர்களுக்கு ஓர் வார்த்தை

இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் முடிந்து, ஓர் மந்திரசபையும் நாட்டின் பரிபாலனத்தை நடாத்துகிறது. இந்தப் பரிபாலனம் எவ்வாறு இருக்கும் என்பதை இப்போது கூற முடியாது. ஆனல், இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன. இப்பிரயத்தனங்கள் யாவும் பிரதிகூலம் அடையுமோ, அநுகூலமடையுமோ என்பது வேறு விஷயம். ஆனல், ஜனத்தலைவர்கள்எனக் கிளம்புவோர், பிரதிநிதிகள் எனத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள், இந்நாட்டின் உண்மைநிலையை உணர்ந்து நாட்டுமக்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் இவை இவை என்பதைத் தேர்ந்து ஓராது பகிரங்கக் கூட்டங்களிலும், துண்டுப் பிரசுரங்களிலும், ஏனைய அறிக்கைகளிலும், பொதுமக்கள் புரிந்துகொள்ள முடியாத அரசியற்பதங்களைப்பிரயோகித்தும், சிக்கல் முக்கலான அரசியற் பிரச்சினைகளைப் புகுத்தியும், பொதுமக்களைத்திணறவைக்கிறார்கள். இலங்கைக்குச் சுயாட்சியம் வேண்டுமா? அதற்கான நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கவேண்டும்? இலங்கைக்கையின் அங்கநாட்டுறவு எவ்வாறு இருக்கவேண்டும் என்று ஓர் சிலரும், புரட்சி, சமத்துவம், ஜனநாயகம் என்ற ஓர் சில பதங்களைப் பிரயோகித்து இன்னேர் சிலரும் காலம் போக்குகின்றனரே யன்றி, இந்நாட்டு மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தி, அவர்களின் வாழ்க்கைநிலையைச் செம்மைப்படுத்தற்கு முயற்சி செய்வதைக்காணேம். உண்பது நாழி, உடுப்பது நான்குமுழம். இந்த நாழி உணவை மக்கள மனரம்மியமாக உண்ணவேண்டும். அந்த நான்கு முழத்தை மனச்சந்துஷ்டியுடன் அணிந்து தம்மானத்தைக் காப்பாற்றவேண்டும். இந்த இரண்டு பிரதான கருமங்களையும் பூர்த்தி செய்ய நம்பிரதிநிதிகளும், ஜனத்தலைவர்களும் முயற்சி செய்யாதவரை இந்நாட்டை இராமன் ஆண்டால் என்ன? ராவணன ஆண்டாலென்ன? கூடவந்த குரங்குதான் ஆண்டால் என்ன என்ற மனப்பான்மையுடன் மக்கள் இருப்பதில் நூதனம் இல்லை!

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—39)

**'நன்மையுமுண்டு
தீமையுமுண்டு"**

பின்னரும் சிவகுருநாதன் அத்துறவியை நோக்கி, "சுவாமி, என் அறியாமை காரணமாகக் கேட்கின்றேன், குறையெண்ணவொண்ணது; பஞ்ச பாண்டவருடைய தாயாகிய குந்திதேவி கன்னிகையாயிருந்த காலத்திலே துருவாச முனிவருக்குத் தொண்டு செய்தாளென்றும், சுபத்திரை,சந்நியாசவடிவங்கொண்டுவந்த அருச்சுனனுக்கு, அவன் அருச்சுனனென்றறியாதவேளையிலே தொண்டு செய்தாளென்றும் பாரதத்திற்சொல்லப்பட்டிருக்கிறதே, சுவாமி" என்றான்; கேட்ட சந்நியாசி "பாரதத்திலே அப்படிச் சொல்லப்பட்டிருத்தல் நிசந்தான்; ஆனல் அக்கன்னியா அவர்களுக்குத் தொண்டு செய்தமையினல் நேர்ந்த நன்மையுமுண்டு தீமையுமுண்டு" என்று அத்துறவி பதில் சொல்லிமுடித்தார், இங்ஙனம் சம்பாஷித்தபின்னர் இருவரும் உறங்கினர். அடுத்த நாளாதலும், அத்துறவிக்குச் சிவகுருநாதன் செய்யக்கூடிய சௌகரியங்களெல்லாஞ் செய்து கப்பலிலேற்றினன்; துறவியும் காசியாத்திரை செய்து மீண்டுவரும்போது அவர்களை வந்து காண்பதாகவும், நமசிவாயத்தை எங்கேனுங்கண்டால் அழைத்துவருவதாகவுஞ்சொல்லிப் புறப்பட்டார். துறவி விஷயம் இங்ஙனமாக, சில நாட்கள் சென்றபின் பாக்கியலட்சுமி தானுங் கணவனும் தங்களுடனிருக்கும் சுவாமியின் அபிமான புத்திரியாகிய தனபாக்கியமும், தங்களுக்கு விடுமுறைநாள் சில நிகழுமாதலின், அந்தவேளையிற் சிவபாக்கியத்திடம் வருவதாகக் கடிதம் எழுதியிருந்தார்கள். அக்கடிதத்தைப் படித்த சிவபாக்கியம், தாய், தமயனென்னும் மூவரும் சந்தோஷமடைந்து அவர்கள் வரவை எதிர்பார்த்தவண்ணமிருந்தனர்; கடிதங்கிடைத்து மூன்று நான்கு தினங்கள் கழிவதற்கிடையில் முன்னர்ச் சொல்லப்பட்ட மூவரும் சிவபாக்கியம் முதலானேர் வசிக்கும் வாசஸ்தானத்தை யடைதலும், அவர்கள் இவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தனர்; விஜயரத்தினத்திற்கு மூன்று நான்கு தினங்கள் மாத்திரம் விடுமுறை நாட்களாதலினல் அவர்இரண்டுநாள்மாத்திரம் அங்கே தங்கி மூன்றாநாள் தம்முடைய உத்தியோகத் தானத்திற்கு மீண்டுபோயினர்; ஆனற் பாக்கியலட்சுமிக்குப் பாடசாலை தொடங்குவதற்குப் பின்னருஞ் சிலவார மிருந்தமையினல், அவள் தனபாக்கியத்துடன் கண்ணகியம்மை முதலியோருடைய இல்லத்திலே தங்கியிருந்தாள்.

**'நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்'"**

கண்ணகியம்மை, சிவபாக்கியம், சிவகுருநாதன் என்னும் இம்மூவரும் முன்னெருபோதும் தனபாக்கியத்தைக் கண்டவரல்லர்; தனபாக்கியத்தின் வரலாற்றை அறிந்தவரையிற் பாக்கியலட்சுமியே அவர்களுக்குச் சொன்னள்; தனபாக்கியத்துக்குப் போரபத்து நேராவண்ணம் பாதுகாத்த அந்தச் சாமியாரையும் அவர்கள் மூவரும் பாராட்டினர்கள்; யாழ்ப்பாணத்திலே தனபாக்கியத்தின் மூதாதையர் யார், இப்பொழுது அங்குள்ள சுற்றத்தவர்கள் யார், அவளுடைய பெற்றார் பிறந்தகிராமம் எவையென்ற இவைகளைப் பற்றி ஏதும் அறியவாமென்று கண்ணகியம்மை ஒவ்வொன்றாக வினவியபோது, தனபாக்கியம் தன் அன்னை தந்தையர் நாமங்களன்றி வேறு எவ்வரலாறு

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்குச் சொந்தம்?

## இலங்கை யரசியல்வாழ்வின் எதிர்காலம்

[ திரு. சி. சரவணர் ]

இலங்கையில் சிங்களருடைய தோற்றம் விஜயனுடைய வரவில் வைத்து எண்ணப்படுகிறது. விஜயனுடைய வரவுக்கு முன்னே 'இயக்கர்' 'நாகர்' எனும் இரு திறத்தாருக்குந்தான் இலங்கை சொந்தம் என்று சரித்திர நூல்களில் சொல்லப்படுகிறது.

மன்னாரிலேயுள்ள மாதோட்ட நகரில் எழுந்துள்ள திருக்கேதீச்வரர் ஆலயமும் திருக்கோணமலையில் உண்டான கோணேசர் ஆலயமும் இலங்கையின் மிகப் பழைய சிவாலயங்களாகும்.

திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரங்களைப் பெற்ற இவ்விரு சிவாலயங்களும் சரித்திரத்தால் அவந்து பார்க்கும் தன்மை பெற்றவை. திருஞானசம்பந்தர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தைக் கொண்டும், கிரேக்கர் உரோமர் முதலியவர்கள் தலையெடுத்து தேசங்களைக்கட்டியாண்டபொழுது அவர்களின் கப்பல்கள் மாதோட்ட நகரை அடைந்து வாணிபஞ்செய்து பண்டமேற்றிச் சென்ற வரலாற்றைக் கொண்டும் தமிழர்களுக்கு இலங்கையில் உரிமை மிகப் பழையகாலத்திலே உண்டாயிற்றென்பதை அறியலாம். தமிழ் வழங்கும் பூமியாக தமிழர் குடியிருந்த பழம் பதிகளாக மாதோட்டமும் திருகோணமாமலையும் யாழ்ப்பாணமும் இலங்கையில் உள்ள இடங்களாகும்.

தமிழ்மன்னர்கள் காடுகெடுத்து நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி குடி திறுவிக் கோலோச்சி சிவாலய மமைத்து நகரைச் சீரமைப்புச் செய்த இடங்கள் தமிழருக்கு இலங்கையிலுள்ள பிரிக்கமுடியாத உரிமையினைக் காட்டுகின்றன இந்த உண்மையினை அறியாத சில சிங்கள அரசியற் குருடர்கள் சிங்கக்கொடிக்குக்கீழ் தமிழர்கள் அடங்கிவாழ வேண்டுமென அலறுகின்றனர். அவர்களுடைய குரலில் சிங்கள ஜாதியினருக்கு மாத்திரமே ஜென்மபூமியாக இலங்கை யுண்டென்றும் சிங்களரல்லாத தமிழர், இஸ்லாமியர், பறங்கியராகிய மூத்திறத்தாரும் வந்தேறு குடிகளென்றும், இலங்கையை ஆளும் பொறுப்பு, கலை, காவியம், ஓவியம், சிற்பம், நடனம் என்பன சிங்கள ஜாதீயப் பண்பாடுகளுடன் பொருந்தியதாக அமையவேண்டுமென்றும் தொனிக்கின்றன. இத்தகைய சிங்களர்களுடைய குரலோடு ஒப்பிடத்தக்க மற்றொரு குரல் பாகிஸ்தானைப்பெறவெடுத்தஜின்னாசாகிப்பின் குரலாகத்தான் இருக்கவேண்டும் அல்லது ஜேர்மன்தேச மக்களது அழிவுக்குக் காரணமாக இருந்த ஹிட்லருடைய குரலைத்தான் ஒப்பிடவேண்டும்.

"சிங்களஜாதீய ஜென்மபூமி" "பவத்தலங்கா" எனக் கொண்டாடப்படுகிற இலங்கையில் தமிழருக்கும் சிங்களவருடன் சரிநிகர் சமானமாக வாழ உரிமையும் ஆட்சியுமுண்டென்டதை சிங்களச் சகோதரர்கள் தெரிந்து சிங்கள, தமிழ, இஸ்லாமிய பறங்கிய ஐக்கிய சமுதாயத்தை உண்டாக்கவேண்டும். அங்ஙனம் ஒரு சமுதாயத்தை உண்டாக்கினால்தான் தேசிய சமுதாயம் என்று பெயர்பெறும். தேசிய சமுதாயம் ஒன்றினால்தான் முழு இலங்கையையும் ஒரு கொடிக்குக்கீழ் வைத்து ஆளமுடியும். எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் ஓர்குடி. எல்லாரும ஈழத்தின் மக்கள் எனக் காண்கிற உண்மையான தேசீயம் இலங்கையில் தோன்றியிருக்குமானால், பாராளுமன்றத்தின் இடப்புறத்தில் பல கட்சிகள் நெருங்கிக்கொண்டிரா. சில முதலாளிக் குடும்பங்கள் இலங்கையின ஆட்சியைக் கைப்பற்றி பங்குபோட்டுக் கொள்வதற்கு ஒன்றுமறியாத ஏழைச் சிங்கள மக்களை இந்தியர்கள்மீதும் இப்பொழுது யாழ்ப்பாணத்தின்மீதும் திருப்பி விட்டிருக்கிறார்கள். இறுதியில் "வாளேந்திய சிங்கக்கொடி" இறுதியாயுதமாக யுபயோகிக்கப்படுகிறது. இலங்கையின் வடபாலிருக்கும் தமிழர்கள் பல தலைமுறைகளாக இலங்கையின் நல்வாழ்வுக்கும், அதன் ஒழுங்கான முன்னேற்றத்துக்கும் தங்கள் அறிவு வலிமையால் பாடுபட்டு வந்தார்கள். இந்தியாவிலிருந்து இலங்கை புகுந்த இந்தியர்கள் ஒழுங்கான கட்டுப்பாடின்றி வியாபாரத்துக்குள்ளும் தோட்டங்களில் உழைப்பாளிகளாகவும் மாறினர். தோட்டக் கூலிச் சனங்களை மனிதர்களாகவாவது மக்கள் வாழுகிற வாழ்வில் சேர்ந்தவர்களாகவாவது யாரும்எண்ணியதில்லை. வியாபாரத்துள் புகுந்தவர்கள் பொருளீட்டுவதொன்றே குறிக்கோளாகக் கொண்டனர். இங்ஙனம்இலங்கையிலுள்ள இந்தியரது முழுப் பலமும் விலையில்லாதிருக்கிறது.

இலங்கை இந்தியர் மாளமுள்ள ஒரு சுதந்திரதேசத்துக்கு சொந்தமானவர்களானால், இரண்டு பிரிவினராகப் பிரிய வேண்டும். ஒரு பிரிவினர் இலங்கையை தாயகமாகக் கொண்டு குடியேறி பிறப்புரிமையைப்பெறவேண்டும். மற்றொரு பிரிவினர் வந்துபோகிற 'நிலையினரை'ச் சேரலாம். இலங்கையை முழு இலங்கையரும் ஒன்றுகூடினால்தான் கட்டியாளலாம். தொகையில் கூடிய சமூகத்தினர் ஏனைய சமூகத்தினரை உள்ளடக்கி ஆளுவது இயலாதென்பதை சென்ற 17 ஆண்டுகளிலும் அறியத் தவறிவிட்டவர்கள் விரைவில் அறிந்துகொள்ளக்கூடும். தமிழர்களும், சிங்களர்களும் மாறுபட்டு ஒருவரையொருவர் கட்டியாளுகிறதென்பது இயலாத தொன்றாகும். சிரேட்ட சகோதரர்களாகிய சிங்களர்களோடு இளைய சகோதரர்களாகிய தமிழ, இஸ்லாமிய, பறங்கிய ஒன்றுசேர்ந்தால்தான் உண்மையான இலங்கையின் பூரண ஆட்சி உதயமாகும். கூலிக்கு ஆட்பிடித்து கட்சித்தொகையை அதிகரிப்பதினால் உண்மையான ஆளுகை பிறந்துவிடாது. தமிழரும், சிங்களரும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

## புகைரதப் பிரயாண வேதனம்

இலங்கைப் புகைரதத்திற் பிரயாணம் செய்தற்காகிய வேதன விகிதத்தை இப்போதுள்ளதிலும் பார்க்க அதிகரிப்பதற்கு இலங்கையரசாங்கம் ஆலோசித்து வருகிறது. அநேகமாக அடுத்த ஆண்டுடன் புகைரதப் பிரயாணச் சீட்டுக்களுக்குரிய வேதன விகிதம் அதிகரிக்கப்படலாம். அப்படி அதிகரித்தால் அந்த அதிகரிப்பு 100 க்கு 50 விகிதமாயிருக்கும் என்று தெரியகிடக்கின்றது.

# சிறைமீட்க வருகுவாயே

—: இறைமணி :—

உள்ளத்துணர்ச்சி காரணமாகப் பொங்கிவெளிப்படுவதே உண்மைக் கவிதை காரிகை கற்றுக் கவிபாடும் போலிப்புலவர்கள் ஜீவகளையுள்ள உயிர்ச்சித்திரங்களையமைக்க முடியாது. கோபம், துக்கம், மகிழ்ச்சி முதலிய எழுச்சிகளினால் சில வேளைகளில் பாமரரும் பாவலராகி விடுகின்றனர். நாட்டுக் கவிகளுட் பல இவ்வாறு பிறந்தனவே. அவற்றில் இலக்கணமிருக்காது. ஆயின் பொருட் செறிவு உயிர் இருக்கும். இத்தகைய கவிகளே அமரத்துவம் வாய்ந்தனவென மதிக்கத்தக்கவை. நாட்டு மக்களின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பக்கூடியனவும் அவைதான். கவிக்குயில் பாரதியாரின் பாடல்கள்பல இத்திறத்தன.

உண்மைக்கவிஞர் இறக்கவும்பாடி இறந்தவன் உயிர்க்கவும் பாடும் வன்மையுடையர் கம்பர் 'காளிங்கராயன் குதிரை மாளக் கொண்டுபோ' என்றுபாடிப் பின் 'மீளக் கொண்டுவா' என்றும் பாடினாரென்பது கதை. 'கூரியவாளாற் குறைபட்டகூன்பலா பண்டுபோல் நிற்கப்' பாடினார் தமிழ் மூதாட்டியார் தம்மையவமதித்த குயக்கொண்டான் மீது "முரணில் போதியில் ... ..." என்று பாடி ஆனந்தஞ் சேர்த்தவரும் ஒரு தமிழ்ப் புலவரே. 'அறம்பாடுதல்' என்றொரு வழக்கமும் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் வழக்கிலிருந்தது. இவையெல்லாம் நாம் நேரே கண்டனவல்ல. ஆயின் மட்டக்களப்பில் சுமார் இருபது வருடங்களுக்கு முன் நடந்த செய்தி. இன்றும் அதை நேரே கண்ட பலர் உயிருடனிருக்கின்றனர். வேறுசான்று தேவையில்லை.

ஏழை. பாமர ஏழை. அவன் மீது வீணே கொலைக்குற்றம் செலுத்திச் சிறையிடுகின்றனர். ஊரவரும் அதற்குடந்தையாக நிற்கின்றனர். அரசாங்க அதிகாரிகளும் அநீதியையே பின்பற்றுகின்றனர். அவன் பக்தன் —அறுமுகனடியான்—கற்றறியாதமூடன். மனம்நொந்து முறையிட்டுப் புலம்புகிறான் — விலங்கு தெறிக்கிறது. சிறைக் கதவு திறக்கிறது. பொய்ச்சாட்சி கூறிப் பொய் வழக்குத் தொடர்ந்தோர் சாபத்தகப்பட்டு மடிந்து சாம்பராகின்றனர். அவனது உள்ளத்துணர்ச்சியிற்றோன்றிய ஒப்பற்ற முறையீட்டை — உயிரோவியத்தைக் கீழே தருகிறேன். இன்றும் கிராமங்களிலுள்ள பலரின் காதுகளில் இப்பாடலிசை கேட்கிறது. பலரது உள்ளங்களில் உன்னத இடம் பெற்றுள்ளது இக்கவி,

வருந்துகின்றே னேழைதனக்
இரங்குமையா வடிவேலா!
அறுமுகனே வாவாசுவாமி
இருந்தடியேன் சிறையில்
மனக்கவலை விபரமெல்லாம்
தீருமையா சிவன்மகனே! வந்து
கருத்தறியா மூடனுக்கு
இந்தவேளை கசடொன்றும்
வாராமற் காக்கவேண்டும்
விரும்பியே யுன்பாதம்
பணிந்தேனையா வேலோனே!
யென்சிறைமீட்க வருகுவாயே.

வாருமையா அறுமுகனே! மயில்மீதேறி
வருந்துகின்றேன் நெடுநாளாய்
மறியல் வீட்டில்
பாருமையா அன்புவையு மென்தன்மீது
பாதந்தந் தென்னை யாள்வாய்
பழனி வேலா!
ஆருமில்லாப் பரதேசியானே னிப்போ
அருமையுடன் பெற்றெடுத்த
தாயாரில்லை
காருமையா அடியேன் தன்னைக்
கருதியருள் புரிந்து சிறைமீட்க
வருகுவாயே.

விரும்பியே யுன்பாதந் தேடிவாறேன்
வேறொருவர் துணையெனக்குக்
காணேனையா
கரும்புதனை யெறும்புவந்து
குடித்தாற்போலே கடிக்குதையா
மூட்டையெந்தன் மேனியெல்லாம்
பொறுத்தாளக்கூடாமல் விடியுமட்டும்
புலம்பினே னுன்னருளைத்
தருவீரென்று
பொரும்புள்ளி மயிலேறி வள்ளிகூடப்
புகழ்ந்தடியேன் சிறைமீட்க
வருகுவாயே

வீரமுள்ள கொஸ்தாப்பு
விதானைமாரும் வெகுசனங்கள்
கூடியென்னை விரைவிற் கட்டி
ஓரமுள்ள நீதிசொல்லிக்
கள்ளனென்று உபாயமதாய்
மாஞ்சியிட்டுக் கொண்டுபோனார்
ஆறுமுள்ள மயில்மீதேறி வந்து
பாருமையா பன்னிரண்டு
கண்களாலே யென்னைப்
பாரமுள்ள கைமாஞ்சி
நோகுதிப்போ பட்சமுடன்
சிறைமீட்க வருகுவாயே.

உன்னையல்லால் வேறுதெய்வம்
உலகிற்காணேன் உமையாள்தன்
மருகோனே பழனிவேலே
என்னையல்லோ பிடித்தவர்கள்
கட்டிக்கொண்டு கட்டுடனே
மறியல்தனில் வைத்து
வன்மையுட னிடித்தடித்துக்
குத்துகின்றார் வலிக்குதையா
தேசமெல்லாம் மானிலத்தில்
உன்பாதமனுதினமுந் துதிப்பேனையா
உவந்தெனது சிறைமீட்க
வருகுவாயே.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# புதிய காங்கிரஸ் தலைவர்

## பாபு ராஜேந்திரப் பிரசாத் தெரிவு

இப்போது சில காலமாகக் காங்கிரஸ் தலைவர் ஆச்சார்ய கிருபாலினிக்கும் இந்திய அரசாங்கத்தை நிர்வகிக்கும் தலைவர்களுக்குமிடையே அபிப்பிராயபேதம் ஏற்பட்டு வந்திருக்கிறது காங்கிரஸ் காரிய நிர்வாகசபைக்குட்பட்டே இந்திய அ



ஆச்சார்ய கிருபாலினி

சாங்கம் கருமம் ஆற்றவேண்டும் என்பது காங்கிரஸ் தலைவரின் கொள்கை. அத்துடன் இந்தியா பாகிஸ்தான் எனப் பாரத நாடு [illegible] லீம்கள் [illegible] நுவிட்டார்களானமையின், இந்தியா ஓர் ஹிந்து ராஜ்யமாக, ஹிந்துக் கொள்கைகளைப் பின்பற்றி இருக்கவேண்டுமென்று ஆச்சார்ய கிருபாலினி அபிப்பிராயங் கொண்டுள்ளார். இந்தியா ஹிந்துக்களுக்கு மாத்திரமல்ல, அங்கே பிறந்து வளரும் சகல மக்களுக்கும் தாயகம்; மதத்தை அடிப்படையாகக்கொண்ட அரசியல்நிறுவாது எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனமாய் மதபேதமற்றி வாழும் மக்களாட்சியை—ஜனநாயக ஆட்சியைக் கொண்டுள்ளதாக இருக்கவேண்டும் என்ற அபிப்பிராயத்தை இந்தியப்பிரதமர் நேருஜியுமகாத்மாகாந்தியடிகளும் கொண்டுள்ளனர். இந்த அபிப்பிராயபேதம் இருக்கும் நிலைமையில், தாம் காங்கிரஸ் தலைவராக இருப்பது கஷ்டம்; ஆகவினால், தாம் அப்பதவியினின்றும் விடுதலைபெற அநுமதியளிக்கவேண்டும் என்று ஆச்சார்ய கிருபாலினி சென்றவாரம் புது டெல்கியில் நிகழ்ந்த காங்கிரஸ் பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார். அவர் கோரிக்கையை அங்கீகரிக்கும்படி, மகாத்மா காந்தி அபிப்பிராயம் தெரிவித்ததன்பேரில் அவர் விலக அநுமதியளிக்கப்பட்டது.

### அடுத்த தலைவர்

ஆச்சார்ய கிருபாலினியின் இடத்துக்கு காங்கிரஸ் தலைவராக பாபு ராஜேந்திரபிர[illegible] செய்யப்பட்டிருக்கிறார். பாபு பிரசாத் அரசியல் நிர்மாணசபையின் தலைவர்; அத்துடன் இந்திய அரசாங்கத்தில் உணவு மந்திரியுமவர். அரசியல் நிர்மாண சபை இப்போது இந்தியப் பாராளுமன்றமாக மாற்றப்பட்டுவிட்டது அதன் தலைவராக, முன்னர் இந்தியச் சட்டசபைத் தலைவராகவிருந்த பிரபல காங்கிரஸ்வாதி ஸ்ரீஜுத் ஜி வி மல்லங்கார் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார், காங்கிரஸ் மகாசபைத் தலைவராக விருந்துகொண்டு மந்திரசபையில் பங்குபற்றி வேலைசெய்வது கஷ்டம் என்று பாபு ராஜேந்திரபிரசாத் அரசாங்கத்தில் தாம் வகித்துவந்த உணவு மந்திரப் பதவியை விட்டு விலகிவிட்டார். இந்திய அரசாங்கத்தில் அவர் வகித்துவந்த பதவியை இனி ஆர் வகிப்பர் என்பது ஓர் பிரச்சினை; ஐக்கிய மாகாணத் தேசாதிபதியாக வங்கத்து டக்ரர் பீதன் சந்திரராய் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் ஓர் தேசாதிபதியாக இருந்து, தம் அபார சக்தியையும் அநுபவத்தையும் பயன்படுத்த முடியாது. ஆகவே, அவர் மத்திய அரசாங்கத்தில் ஓர் மந்திரியாக இருக்கவேண்டுமென்ற ஆலோசனை கூறப்பட்டுவருகிறது. ஆகவே, டக்ரர் ராய் தேசாதிபதியாகப் போகாமல் பாபு இராஜேந்திரபிரசாத்வகித்த உணவு மந்திரிப் பதவியை வகிக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. அப்படியானால், இப்போது ஐக்கிய மாகாணத்தில் தற்காலிக தேசாதிபதியாகவுள்ள ஸ்ரீமதி சரோஜினி தேவி, நிரந்தர தேசாதிபதியாக நியமிக்கப்படலாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாளேந்திய சிங்கக்கொடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ர்கள் காலஞ்சென்றமை குறித்து ஓர் அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர் கீழ்க்காணுவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்கள்: த. திருநாவுக்கரசு, கு. வைரமுத்து, கு. சுப்பிரமணியம், க. அருளம்பலம் இ கந்தையா, தலைவர்: திரு. சி. கணபதிப்பிள்ளை, உப தலைவர்கள்: திரு. செ. தி. சம்பந்தன், தி. சிவசாமி, காரியதரிசிகள்: திரு பொ. நாகராஜா திரு. லை. தியாகராசா, தனாதிகாரி: திரு. செ. சுப்பிரமணியம், உப தனாதிகாரி: திரு வி. குகதாசன், நிர்வாக சபை அங்கத்தவர்கள் உட்பட திரு. தி. தவநாயகம், திரு. அ. தெட்சணாமூர்த்தி, திரு. நா. தம்பியையா, திரு அ இலங்கைராசா, திரு. இ. விநாயகமூர்த்தி, திரு. இ. சின்னத்துரை, திரு. ந. துஷ்பந்தன்.

ஈற்றில் சபையோர் குறிப்புரையுடனும், தலைவர் முடிவுரையுடனும் கூட்டம் முற்றுப்பெற்றது,

## "சிங்கக்கொடியே" வேண்டும்

சென்றவாரம் கூடிய டெகிவெலை நகரசங்கக் கூட்டத்தில் வாளேந்திய சிங்கம் பொறிக்கப்பட்ட கொடியே இலங்கையின் தேசியக் கொடியாக நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற ஓர் தீர்மானம் நிறைவேறியது. காலி முனிசிப்பற் சபையிலும் இதுபோன்ற ஓர் தீர்மானம் எடுத்தாளப்படவிருக்கிறது.

சென்றவாரம் அநுராதபுரம் நகரசபையிலும் இப்படியான ஓர் தீர்மானம் நிறைவேறியது,

## வெங்காயம் அதிகம் கிடைக்குமாம்

இலங்கை உணவுப்பகுதி யதிகாரி ஸ்ரீ கே. ஆள்வாப்பிள்ளை, இந்தியாவிலிருந்து மீண்டுவிட்டார். அவர் அங்கே இலங்கைக்கு வெங்காயம் சர்க்கரை என்பன அனுப்புவதுபற்றி அங்குள்ள அதிகாரிகளுடன் சம்பாஷித்தார். அதன்பயனாக, கூடிய சீக்கிரம் இங்கே 600 தொன் வெங்காயம் அனுப்பப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து ஒழுங்காக வெங்காயம் கிடைக்கும் என்றும் தெரிகிறது.

## திருக்கோணமலை

முதலாம் பக்கத் தொடர்ச்சி

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இப்போது ஏற்பட்டுள்ள உடன்படிக்கையைப்பற்றிக் குறிப்பிட்டார்.

இலங்கை இந்தியாவின் அண்மையில் உள்ளது. இந்த நாட்டின் வாழ்வு தாழ்வுகளில் இந்தியாவுக்கும் ஓரளவு பங்குண்டு. ஆகவே இங்கிலாந்துடன் ராணுவம் சம்பந்தமாக ஒப்பந்தங்கள் இயற்றமுன், இலங்கை, இந்தியத் தலைவர்களான பண்டிதர்நேரு, மகாத்மா காந்தி முதலியவர்களையும் கலந்து ஆலோசித்திருக்கலாம் அப்படிக் கலந்தாலோசிக்காமல் யதேஷ்டையாகச் செய்யும் உடன்படிக்கைகள் ஓர்சமயம் ஆபத்திலும் கொண்டுபோய் விடக்கூடும் என்று ஸ்ரீ வேதநாயகம் கூறி மேலும் தெரிவித்ததாவது:

பர்மாவின்சுதந்திரம்சம்பந்தமான உடன்படிக்கை இங்கிலாந்திலேயே நிறைவேறியதென்றாலும், பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்யமுன், பர்மியத் தலைவர்கள், இந்தியத் தலைவர்களையும் கலந்தாலோசித்தனர். இலங்கை மற்றும அந்நிய தேசங்களைத் தனது உதவிக்கு எதிர்பார்ப்பதைவிட, அயல் தேசமாகிய இந்தியாவை எதிர்பார்ப்பதே மேல். இலங்கைக்குதவிசெய்ய இந்தியா எந்நேரமும் தயார்."

## திருச்சி ரேடியோ

**சனி நவம்பர் 22**

7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எஸ. சீதாலக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 லால்குடி ஜி ஜயராமன் வயலின் 8 30 காலை இசை 9 முடிவு

1 லால்குடி ஜி ஜயராமன் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 ஆங்கிலப் பேச்சு 2 15 போலகம் ஏ. கே, சாம்பசிவன் பாட்டு 2 45 முடிவு

மாலை 5 போலகம் ஏ கே சாம்பசிவன் பாட்டு 5 40 பெரியபுராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 எஸ். சீதாலட்மி பாட்டு 7 15 ஆலயங்களும் மடங்களும் 7 30 தமிழில் செய்திகள் 7 45 மதராவில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 மதராவில்உள்ளபடி 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி ஜி சங்கரகோபாலன் புல்லாங்குழல் 10 இசைவேளை 10 30 ஒலிபரப்பு முடிவு.

**ஞாயிறு நவம்பர் 23**

7 15 ஆரம்பம் 7 0 தமிழில் செய்திகள் 7 30 பி ராமசாமி ஐயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர் 8 30 எச் எஸ் மத்வாச்சார் கோட்டுவாத்தியம் 9 முடிவு

12 ஆரம்பம் 12 30 வினையும் வேலாயுதமும் நாடகம் 12 45 பிரம்மா கோகிலம் 12 50 அதிமதுரம் 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 மருங்காபுரி கோபாலகிருஷ்ண ஐயர் வயலின் 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 பி. ராமசாமி ஐயர் பாட்டு 5 40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 எச் எஸ் மத்வாச்சார் கோட்டுவாத்யம் 7 15 துஹரம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 சித்ரகானம் 8 கோலார் ராஜம் பாட்டு 6 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 எஸ் ஜி கிட்டப்பா 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 தந்தி இசை 10 இசைவேளை 10 30 முடிவு.

**திங்கள் நவம்பர் 24**

7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 அம்பல் டி ராமச்சந்திரன் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் 8 30 திவளூர் டி எம் சண்முகசுந்தரம் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கோயமுத்தூர் பி ஆர் ராமச்சந்திரன் வயலின் 2 தமிழில்செய்திகள் 2 05 கோயமுத்தூர் பி ஆர் ராமச்சந்திரராவ் வயலின் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 அம்பல் டி ராமச்சந்திரன் நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 காரைக்கால் ஏ முகம்மது தாவத் 7 30 தமிழில் செய்திகள் 7 45 தாகு தேவையா 8 திவளூர் டி எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 8 30 கோயமுத்தூர் பி ஆர் ராமச்சந்திரராவ் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 16 குரல்வகை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வீதார் தில்ரூபா 10 இசைவேளை 10 30 முடிவு.

**செவ்வாய் நவம்பர் 25**

7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 மூவலூர் எஸ்செல்லப்பாபாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை 8 30 ஏ என் வி அண்ணாமலை பாட்டு 9 முடிவு

1 ஆரம்பம் 1 30 ஆங்கிலத்தில்செய்திகள் 1 40 ஏ என் வி டி அண்ணாமலை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஏ என் வி டி அண்ணாமலை பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்ய கச்சேரி 7 15 சித்ரகானம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 திருப்பாம்புரம் என். சாமிநாத பிள்ளை புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9 15 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஸ்ரீ வைகுண்டம் எஸ் பரமசிவம்பிள்ளை பாட்டு 10 நீங்கள் கேட்டவை 10 30 முடிவு.

## சிறைமீட்க வருவாயே

3ம் பக்கத் தொடர்ச்சி

ஊரைவிட்டுப் பிறதேசம்
கொண்டுபோனூர் ஒருவருமே
துணையெனக்குக் காணேனையா
வாரமிட்டு வழக்கதனைப் பேசவென்று
வாறூர்கள் வெகுசனங்கள்
எதிரிபக்கம்
ஆரமிட்ட மணிமார்பா என்முன்னின்று
அன்புடனே நீதிதிறம்
உண்மையெல்லாம்
சோரவிடாவண்ண மிப்போ
பேசுமையாவென்துயர் தீர்த்துச்
சிறைமீட்க வருகுவாயே.

வெள்ளியினுல் முள்ளலகு நாகபாஸம்
விலங்கிட்டுக் கைதனிலே
வேலுமேந்தி
வள்ளியம்மாள் தெய்வானைத்
தாயார்பாதம்வந்துநானேனூர்மனதாய்
தொண்டு செய்வேன்
சொல்லுமம்மா தெள்ளியதோர்
வேலவர்க்கு என் சிறைதன்னை
மீட்டுவிடவேண்டுமென்று
முன்னிட்டு முதுகினிலே
வருவேனையா முன்வந்து
சிறைமீட்க வருகுவாயே.

வேற்றுருவமாகிநான் சிறையிட்டப்பட்டு
மிகமெலிந்து வாடுகிறேன்
விதிவசத்தால்
மாற்றிடுவாயிச் சிறையை
வானோர்கோவே! மாற்றுயர்ந்த
தங்கநிற மேனியனே!
ஆற்றிடவும் துணையெனக்குக்
காணேனையா அறுமுகனே!
அன்புடனே வாவா சுவாமி
காற்றனக்கு வீசுதையா
வெண்சாமரை கடம்பனே!
யிச்சிறைமீட்க வருகுவாயே.

ஒன்றுமறியேன் பொருளறியேன்
உருகுதையா வெனதுநெஞ்சம்
தீயிலிட்ட மெழுகதுபோல்
கொன்றுகொலை செய்யவென்று
கூட்டமாயவர்கள் கூடிப்பேசும்
பொழுததனைக்
கண்டுனது மனமிரங்கிக் கருணைகூர்ந்து
கருத்துடனே வந்தெனது கனவிற்
சொன்னுய்
அன்றுதொட்டின்றுவரை
யுனக்கடியையானேன் ஆசிரித்துச்
சிறைமீட்க வருகுவாயே.

ஓதுமொழிதனைக்கேளு முமைமாதீன்ற
உண்மையுள்ள தற்பரனே
யென்னையாள்வாய்
சூதுசெய்து சண்டாளன்
சிறையில் வைத்தான் சிவசிவா
இதனைப்போற்கொடுமையுண்டோ
சூதுசெய்தசண்டாளன்நெஞ்சதனிலே
யுந்தன் சூரசங்கார வேலாற்
குத்திடுவாய்
மாதுமையாம் பார்வதியும் ஈஸ்பரனும்
மனதிரங்கிச் சிறைமீட்க
வருகுவாயே.

வையகத்திற் பொய்வழக்குச்
சொன்னபேரை வடிவானவேலிட்டு
அறுக்கவேண்டும்
மெய்யான அதிசயத்தைக்
கண்ணுற்க மேன்மையுடன்
சான்றுகளும் காட்டவேண்டும்
பொய்யான காயமது நான்சுமந்தேன்
பேர்பெரிய சிறையுறைய
விதித்தாயையா
ஐயா நானடிபணிந்து
தெண்டனிட்டேன் அடியேன்மீ
தருள்புரிந்து சிறைமீட்கவருகுவாயே

வெளவியிலே மரமதுசேர்ந்தாற்போலே
வந்தென்முன்னின்று பொய்ச்சாட்சி
சொன்னவரை
கௌவியே கருப்புலி நாசமது
கடிக்கவேணும் கதிர்காமந்தனை
நினைந்தால் வினைகள்தீரும்
ஔவியேயரவமது தீண்டுதற்கு
அருள்புரிவாய் சத்துரு
சங்காரவேலே!
மேவியே பழனிமலை மீதிருந்து
மேன்மேலுந் தான் பட்சமுடன்
சிறைமீட்க வருகுவாயே.

இவ்விதம் பாடுகிறேனுனை நினைந்து
ஏதுபிழை வந்தாலும் எந்தனைப்
பொறுத்தேயாள்வாய்
செவ்வையுடன் துதிசொல்லிப்
பாடுதற்குச்சீருடனேசரஸ்வதியென்
நாவில்நிற்பாய்
[illegible] குடித்தமுனி பகர்ந்த
தமிழ்ப்பரிசுதனை நானறியப்
[illegible] செய்வாய்
எவ்வுயிர்க்கும் தாயான ஈசன் மைந்தா!
இக்கணமே சிறைமீட்க
வருகுவாயே,

## வேலணைத் தபாற் கந்தோர்

### ஊரவர்களின் அதிருப்தி

இந்த நவம்பர்மாசம் 12உ மாலை 6மணியளவில்சரவணை பள்ளம்புல முருகமூர்த்தி கோவிலில் திரு. நா. நடராசா அவர்கள் தலைமையிற் கூடிய பொதுக்கூட்டம் கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

1 வேலணை உப தபாற்கந்தோருக்கு மிகக் குறைந்த பணந்தான் கொடுக்கப்படுகின்றது. இதனுற் பொதுசனங்கள் தங்கள் மனி-போஸ்ரல் ஓடர்களை மாற்றிக்கொள்வதற்கு பலநாட்கள் செலவழித்துப் பெரிதுங் கஷ்டப்படவேண்டி யிருக்கின்றது. இக்குறையை நீக்கித்தரும்படி இச்சபை அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகின்றது,

2 ஓர் சிறிய தபாற்கந்தோருக்குக் கொடுக்கப்படவேண்டிய அளவு பணத் தொகையிலும் பார்க்கக் கூட்டிக் கொடுப்பதற்குச் சட்டம் இடங்கொடாதென்றால்: வேலணைத் தபாற்கந்தோர் சிலபாடசாலைகளுக்குச் சம்பளம் கொடுக்கின்றது. இப்பாடசாலைச் சம்பளங்களை 10 நாட்கள் வரை பங்கிடுசெய்து கொடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த நாட்களில் பொதுசனங்களின கதி அதோகதிதான். ஒருசில ஆசிரியர்கள் படலைதிறந்ததும் பணம் பெறுவதற்காக இவர்களின் வசதிக்காக ஏழைப் பொதுசனங்களின் நலன்களைப் பலியிடுவது கூடாதென்பதை இலங்கை அரசியல்-சுதந்திரவேட்கையோடு முன்னேறிச் செல்லுகின்ற அரசியல்-ஏற்காமலிருக்க முடியாது. இப்பாடசாலைகளுக்கு அண்மையிலுள்ள ஊர்காவற்றுறைப் பெரிய கந்தோரில் பணங்கொடுப்பதில் எதுவொரு கஷ்டமுமில்லை. நஷ்டமுமில்லை. பொதுஜனங்களும், ஆசிரியர்களும் வேலணைத் தபாற்கந்தோர் வாசலில் நீடித்தநேரம் நிற்கவேண்டியதுமில்லை.

எனவே பணத்தைக் கூட்டிக் கொடுப்பது முடியாதென்றால் பாடசாலைச் சம்பளங்களை வேலணையிலிருந்து ஊர்காவற்றுறைக்கு மாற்றிவிடுவதே பொதுஜனங்களின் இன்னல்களைத் தீர்ப்பதற்கு வழியெனவும், இவ்வாறுவது செய்யும்படியும் இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது.

இத்தீர்மானங்கள் தபாற்பகுதித் தலைவர் தபால் தந்திப்பகுதி மந்திரி, ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதிநிதி ஆகியவர்களுக்கு அனுப்பப்படவேண்டுமெனவுந் தீர்மானிக்கப்பட்டது.


## தேவை

செம்பியன்பற்றுக் கிராமச்சங்கத்திற்கு ஓர் லிகிதர் தேவை ஆங்கிலமும் தமிழும் பேச எழுதத் தெரிந்தவராய் இருக்கவேண்டும். மனுப்பத்திரத்துடன் 2 க்குக் குறையாத நற்சாட்சிப்பத்திரம் சேர்த்து மார்கழிமாசம் 5ந் திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாய் அனுப்பவேண்டும்.

சம்பளம் மாசம் ரூபா 20ம் தற்காலிக உயர்வு சம்பளமும் யுத்த சகாயப்பணமும் கொடுக்கப்படும். நியமிக்கப்பட்டவர் ரூபா 250. ரொக்கப்பிணை அல்லது காணிப்பிணை அல்லது கொம்பனிப்பிணை கட்டலாம்.

தலைவர்,
கிராமச்சங்கம்,
செம்பியன்பற்று.

Mis 1?7 21—11—47.

## அறிவித்தல்

அனுராசபுரம் விவேகாநந்த வித்தியாலயத்தில் படிப்பிக்க பத்திரம் (Certificate) பெற்ற ஒரு உபாத்தியாயினி தேவை. தையலும் சங்கீதமும் தெரிய வேண்டும் வித்தியாலய மனேச்சருக்கு மனுச்செய்க. 30-ந் திகதிக்குமுன்.

வே. இராமசுவாமி
மனேச்சர்.

17-11-47
M 186 2?-1-47

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

மறியாதவளாய்த் தியங்கினுள்; எங்ஙனமாயினும், அந்தப் பிள்ளை குலங் குடியிற் பிறந்தவளென்பதையும், செல்வமாக வளர்ந்தவள் என்பதையும் கண்ணகியம்மை முதலானோர் அவளிடத்துள்ள குணங்கள், செயல்கள், ஊடாடும் முறை முதலியவற்றாலும் அவளுடைய முகத்தில் விளங்கும் "தேஜஸ்" என்று சொல்லப்படும் இயல்பான ஒளியினாலும் அயிர்த்துக் கொண்டார்கள், "நடையும் நடைப் பழக்கம், நட்புந் தயையும் கொடையும் பிறவிக்குணம்" என்றல்லவா பெரியோர் பாடியுள்ளார்கள்; தனபாக்கியம் நித்திய சந்தோஷத்தோடு கூடியவளாகக் காணப்பட்டனளெனினும், இடையிடையே அவள் திடுக்கிடுகுதலையும், உடனே அவள் முகம் வாடுதலையும், பின்னர் ஒருவாறுதேறுதலடைதலையும் சிவபாக்கியம் அவதானித்து, பாக்கியலட்சுமியை அதன் காரணமென்னவென்று வினவ, அவள் "அக்கா, நானும் அதனை அவதானித்தேன்; ஆனாலும் அந்தப் பிள்ளையை நேரிற் காரணங்கேட்க என் மனம் எழவில்லை; தன் பெற்றாரைப் பற்றி நினைக்கும்போது அப்படியான ஏக்கம் முகவாட்டம் முதலியவை தோன்றுகின்றனபோலும் மென்று எண்ணியிருக்கிறேன்" என்றாள்; 'தங்காய், நீ சொல்வதுதான் காரணமாயிருக்கவேண்டுமென நானும் எண்ணுகின்றேன்" என்றாள் சிவபாக்கியம்; தனபாக்கியம் வயசில் மற்றை இரு பாக்கியங்கட்கும் இளையவள்; அழகில் அவ்விருவரைக் காட்டிலும் சிறந்தவள்; குணம் நடை இன்சொல் முதலியவற்றில் அவ்விருவரையும் ஒத்தவளெனலாம்; அவள் சிலநாள் அங்கே தங்கியிருக்கும்போது, சிவபாக்கியத்தைத் தன் உடன்பிறந்தாள் போலவும், கண்ணகியம்மையைத் தன் தாய்போலவு , சிவகுருநாதனைத் தன் உற்றவனை போலவும் மதித்தொழுகிவருவராயினுள் அதனுல் அந்த மூவரும் தனபாக்கியத்திடம் அதிக அன்பும் விசுவாசமும் பாராட்டி நடப்பாராயினர்; அவளும் அவர்களிடம் அப்படியே நடந்துவந்தாள்: "தங்காய், எங்கள் சாமியார் காசியாத்திரைசெய்து மீளும்போது, முதல் இங்கேவந்து எங்களைக் கண்டுகொண்டு பின்னர்த்தான் உங்களிடம் வருவதாகச் சொல்லியிருக்கிறார். ஆனதால் அவர் மீண்டு இங்கே வருங்காறும் தனபாக்கியம் இங்கேயிருந்தாலென்ன? சாமியார் வரும்போது உடன் அனுப்பி வைக்கலாம்" என்று சிவபாக்கியம் கேட்க, "அக்கா, இந்தத் தங்கைச்சி என்னுடனிருந்தாலென்ன, உங்களோடிருந்தாலென்ன, அதிலொரு பேதமுமில்லை; ஆனால், அக்கா, உங்களுக்கு எங்கள் தாயார் துணையாக இருக்கிறார்; நானிருக்குமிடத்தில் இந்தத் தங்கைச்சியைத் தவிர வேறு பெண்துணை எனக்கு வேறுமில்லை, அக்கா; அதையிட்டுத்தான் யோசிக்கிறேன்" என்றாள் பாக்கியலட்சுமி; "தங்காய், நீர் சொல்வதுமுழுவதுஞ் சரி, நான் கேட்டது பிழை; குறையெண்ணாதீர்" என்று சிவபாக்கியம் பரிவுடன் சொல்ல, "இதிலே குறையெண்ணுவதெப்படி? அக்கா, அன்பு முதிர்ச்சியினாலே நீங்கள் கேட்டீர்கள் அன்பு மேலீட்டினாலேதான் நான் தடுத்துப் பதில் சொன்னேன்" என்று சமாதானஞ் சொன்னாள் பாக்கியலட்சுமி.

### "புருஷனாலே திருந்தும் மனைவியும் மனைவியாலேதிருந்தும் புருஷனுமுண்டு"

இங்ஙனஞ் சிலவாரங்கள் செல்ல, பாக்கியலட்சுமி படிப்பிக்கும் பள்ளிக்கூடத்தின் விடுமுறைநாட்களுங் கழிந்து, அது பழையபடி ஆரம்பிக்கும் நாளும் சமீபிக்க, விஜயரத்தினமிடமிருந்து ஒரு கடிதம் அவன் மனைவியாகிய பாக்கியலட்சுமிக்குக்கிடைத்தது; அதில், தாம் உத்தியோகக் கடமையை விட்டு விடுமுறைநாள் பெற்றுக்கொண்டு அவ்விடம் வரமுடியாதெனவும், ஆதலினல், அங்கு நிற்கும் விசுவாசமுள்ள பணியாளனாகிய இராமனைத் துணையாகக் கூட்டிக்கொண்டு வந்து சேர்வதுதான் புத்தியாகுமென்றும், இதற்கிடையில் அங்கே (கண்ணகியம்மை முதலானோர் இருக்குமிடத்திற்கு, சுவாமியார் யாத்திரை முடித்துக்கொண்டு மீண்டுவந்தால் அவரோடு கூடிக்கொண்டு வரலாகுமென்றும் அக்கடிதத்தில் விஜயரத்தினம் தமது மனைவிக்கு எழுதியிருந்தார்: குறித்தநாள் வருவதற்கிடையிற் சுவாமி அங்கே வந்தால் அவருடன் கூடிக்கொண்டு கணவன் இருக்குமிடத்திற்குத் தாங்கள் போகலாகுமென்றும், வரப்பிந்தினல் இராமனைத் துணையாகக் கூட்டிக்கொண்டு போகலாகுமென்றும் பாக்கியலட்சுமி உத்தேசித்துக்கொண்டிருந்தாள்: இப்படியாக ஒருநாள் பாக்கியலட்சுமி தனியே யிருக்குஞ் சமயம் பார்த்து, கண்ணகியம்மை அவளைப் பரிவுடன் நோக்கி "மகளே, கேட்கிறேனென்று இலச்சைப்படாதே, உன் கணவன் உன்னோடு இதமாக நடந்துகொள்ளுகிறாரா? நீ அவருக்குக் கீழ்ப்படிவாகவும் விசுவாசமாகவும் பணியாற்றி வருகிறாயோ" என்று ஆதரவுடன் கேட்க, "அம்மா, எங்கள் இல்வாழ்க்கையைப்பற்றி நீங்கள் விசாரிக்காமல் வேறு யார் விசாரிப்பது; ஏதோ நீங்கள் நல்லமனசோடு நிறைவேற்றிவைத்தபடியினற் போலும, நாங்கள் இருவரும் எவ்வகையான வேற்றுமையுமின்றி ஒருவகையான குறைவுமின்றி இனிது வாழ்ந்து வருகிறோம்: "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்றபிரகாரம் அவர் விருப்பறிந்து அதற்கிணங்க நான் நடந்து வருகிறேன், அவரும் என்னை அன்போடு ஆதரித்து வருகிறார் அம்மா" என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள்; இதனைத்தான் நாம் விரும்புவது, மகளே புருஷனாலே திருந்தும் மனைவியுமுண்டு; மனைவியாலேதிருந்துங் கணவனுமுண்டென்று சொல்லுவார்கள் நல்லநாள் நட்சத்திரம் பாராமல், விதிப்படி கிரியைகள் செய்யாமல், கப்பலில் நடந்த கல்யாணம், என்னவாய் வருமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்; இப்பொழுது மகளே, உன் வாயினாலேயே நாங்களிருவரும் ஒரு குறையுமின்றி அன்பாய் வாழ்கின்றோம் என்று சொல்லக் கேட்டேன்; இவ்வளவும் போதும் என் மகளே" என்று சொல்லிச் சந்தோஷப்பட்டாள் கண்ணகியம்மை பாக்கியலட்சுமி தாங்கள் இருக்கும் ஊருக்குப் புறப்பட வேண்டிய நாள் சமீபித்துவிட்டது. சுவாமியாருடைய வரவை எதிர்பார்த்தார்கள்: வரக் கண்டிலர்; சிவகுருநாதனுக்கு அந்த நாட்களில் உத்தியோக ஒய்வு கிடைத்தது; அதனுல் சிவகுருநாதனே பாக்கியலட்சுமியையும் தனபாக்கியத்தையும் அவர்களிருக்குமூருக்குக் கூட்டிக்கொண்டு போய் விட நோக்கங்கொண்டான்: தன்னுேக்கத்தைச் சிவகுருநாதன் சொன்னமாத்திரத்தே பாக்கியலட்சுமி பெரிதுஞ் சந்தோஷப்பட்டாள் "அண்ணு, உங்களைநான் சிரமப்படுத்துகிறேனே' என்று பாக்கியலட்சுமி கேட்க, "எனக்கு எவ்வகையான சிரமமுமில்லை, தங்கைச்சி, நானும் உங்கள் ஊரை ஒருமுறை பார்க்க விரும்புகிறேன்; அல்லாமலும் இது என் கடமையல்லவா" என்று அன்புடன் புகன்றான் சிவகுருநாதன்; அவர்கள் புறப்படும்போது, கண்ணகியம்மை பாக்கியலட்சுமியை நோக்கி, (தனபாக்கியத்தைச் சுட்டிக்காட்டி) "மகளே, இந்தப்பிள்ளையோ எங்கள் [illegible] எந்த [illegible] அறியாமல் இந்தப் பிள்ளையை வெளியில் விட்டுவிடாதே" ன்றுசொல்லி, அவர்கள் மூவருக்கும் பிரியாவிடை சொல்லிப் பயணமனுப்ப, பாக்கியலட்சுமியும் தனபாக்கியமும் சிவகுருநாதனைத் துணையாகக்கொண்டு தாங்களிருக்கும் ஊருக்குப் போவாராயினர்; அவர்கள் புறப்பட்ட அடுத்த நாள், சுவாமியாருமயாத்திரைமுடித்துக்கொண்டு மீண்டு கண்ணகியம்மை முதலானோர் வசிக்கும் இல்லத்தில் வந்து சேர்ந்தார். (வரும்)

## "நாவலன்"

புத்தகவடிவமான இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலை மாணவர் சங்கத்தினரால் வெளியிடப்பெற்று வருவது, இது முந்தி ஒன்பது ஆண்டுகளாகக் கிரமமாக வெளிவந்து, இடையில் நேர்ந்த யுத்தங்காரணமாக ஏற்பட்ட காகிதப்பஞ்சம் கட்டுப்பாடு முதலிய நிபந்தனைகளால். பின்னர் 9 வருடகாலம் வெளிவராதிருந்து இப்பொழுது புத்துயிரும் அழகும் பெற்று வெளிவரலாயிற்று; இந்த வெளியீட்டின்கண் சைவ ஆசிரியர் கலாசாலை விருத்தி வரலாறு என்னுமிவைகளுடன் பல சிறந்த வியாசங்களும், சைவ ஆசிரியர் கலாசாலையிலும் சைவ வித்தியா விருத்திச்சங்கத்திலும் ஈடுபட்டுழைப்பார் சிலருடைய பிரதிமைப்படங்களும் இன்னபிறவும அடங்கியுள்ளன; பிரதி நல்ல காகிதத்தில் தெளிவாக அச்சிட்டு வனப்புறக் கட்டப்பட்டு வெளிவந்துள்ளது. மேற்படி கலாசாலை மாணவர்களுடைய முயற்சி பாராட்டி ஆதரிக்கத்தக்கதாகும். எமது பார்வைக் குதவிய பிரதியை உவந்தேற்றாம்.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில், நிகழும் கார்த்திகை மாசம் 10-ந் தேதி (25-11-47) செவ்வாய்க்கிழமை மாலை $6\frac{1}{2}$ மணி தொடக்கம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் தண்டமிழ்ச் செஞ்சொற் செல்வரும், முத்தமிழ்ப் புலவருமாகிய விருதை திரு. ச. கண்ணனடிகள் "சைவசமயமும் திருமூலரும்" என்னும் பொருள்பற்றி ஓர் ஆராய்ச்சி இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்துவாரென மேற்படி சபைக் கௌரவ காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## விவாகம்

### காசிநாதன் — புஷ்பகாந்தி

சென்ற ஐப்பசி மீ ௨௪ உ (10-11-47) திங்கட்கிழமையன்று நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சித்தங்கேணி வாசரும், காலஞ்சென்ற திரு சபாபதியார் அப்பாபிள்ளை அவர்களின் புத்திரன் திரு. காசிநாதனுக்கும், கொழும்பு ஹோட்டன்பிளேஸ் 105 ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. தம்பையா கார்த்திகேசு அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி புஷ்பகாந்திக்கும் சைவாசார முறைப்படி மணமகள் இல்லத்திற்றானே விவாகம் இனிது நடந்தேறியது. அச்சமயம் தம்பதிகளின் சுற்றமித்திரர்கள் சமுகமளித்து மணமக்கள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இனிது வாழும்வண்ணம் எல்லாம்வல்ல இறைவனை வாழ்த்தினர்.

—கடித

## இளவரசி விவாகம்

பிரிட்டிஷ் மன்னரின் சிரேட்ட புதல்வி, எலிசபெத் இளவரசிக்கும் பிலிப் மவுண்ற்பேற்றன் இளவரசர்க்கும் நேற்றையத் தினம் விவாகம் சிறப்பாக நிகழ்ந்தது.

## காரைநகர்ச் சைவமகாசபை

விருதை முத்தமிழ்ப் புலவர் திருவாளர் ச. கண்ணன் அடிகள் அவர்கள் "தமிழன் இதயமும் பாரதியாரும்" என்னும் பொருள்பற்றி 22-11-47 சனிக்கிழமை 5 மணியளவில் காரைநகர்ச் சைவமகாசபை மண்டபத்தில் சொற்பொழிவாற்றுவார். —கடித.

## தேகவியோகம்

### இரத்தினசபாபதி ஐயர்

யாழ்ப்பாணம் கோக்குவில் சோதிட பரிபாலனமடம் வாக்கிய பஞ்சாங்க கணிதர் பிரமஸ்ரீ ச. இ. சிவராமலிங்கையர் அவர்களுடைய இரண்டாம் புதல்வரும், ஆரியதிராவிட பண்டிதரும், மேற்படி வாக்கிய பஞ்சாங்க கணிதராகவுமுள்ள பிரமஸ்ரீ இ. சி. இரகுநாதையரவர்களின் தம்பியாருமாகிய பிரமஸ்ரீ இரத்னசபாபதி ஐயரவர்கள் இந்தக் கார்த்திகை மாசம் ௨ உ சோமவாரத்தன்று பிற்பகல் 4 மணிவரையில் கோக்குவிலிலுள்ள தமது இல்லத்திற்றனே தேகவியோகமாயினர் என்னுந் துக்கச் செய்தியை அறியலானோம்; இவருடைய ஈமக்கிரியைகள் அடுத்தநாள் மத்தியானம் பல சுற்றமித்திரர் சமுகத்தில் நடைபெற்றன. இவர் வாக்கியகணித பஞ்சாங்கம் கணித்து அச்சிட்டு வெளியாகும் விஷயத்தில் தமது சகோதரருக்கு இன்றியமையாத் துணையாகவுள்ளவர்; இவருடைய அகாலமரணம் வாக்கியகணித பஞ்சாங்கத்திற்குப் பெருங் குறை விளைப்பதாகும். இவரது ஆன்மா சாந்தியடைவதாக

பண்டிதர்

ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

## அறுபதாமாண்டு நிறைவு விழா நிதி

நமது பண்டிதரவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை, வருகிற மார்கழி மீ ௧௨ உ (27-12-47) சனிக்கிழமை திருவருளை முன்னிட்டு நடத்த நிச்சயித்திருப்பதால், அத்தேதிக்கு முந்தியே மேற்படி பண்டிதரவர்களின் மாணாக்கர்கள் அபிமானிகளாயுள்ளாரனைவரும் இந்நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்றபணம் உதவுக மேலும் பணம் உதவும் அன்பர்கள் தம்பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி, திரு. S. P. கந்தையா அவர்கள் மேற்படி நிதித் தனதிகாரி, இந்துசாதனலயம், வண்ணார்பண்ணை என்னும் விலாசத்திற்கு அனுப்புக

இந் நிதிக்குப் பண முதவுவோரின் பெயர், விலாசம், பணத் தொகை முதலியன இப் பத்திரிகையில் வெளிவரும்.

கா. கந்தையா,
தலைவர்.

க. சி. சுப்பிரமணியம்,
காரியதரிசி.

ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை, வண்ணார்பண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
சி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

# தந்தரோக சஞ்சீவி
## கந்தசாமி வைத்தியர்
## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 (வெ)

# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242,ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

Std.29 1-8—30-7-48

# மலேயாவுக்குக் கப்பல் பிரயாணம்

## யாழ்ப்பாணம்—சென்னபட்டணம—பினங்—சிங்கப்பூர்

சென்னபட்டணம் மார்க்கம் பினங், சிங்கப்பூருக்கு மாதம் இருமுறையும் நேரே சிங்கப்பூருக்கு ஒருமுறையும் வசதிகளடங்கிய,

கப்பல் பிரயாணச் சீட்டு

எம்மூலம் 1947 நவம்பர் மாதம் தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்

எஸ். ஆர். எஸ். நாதன்
21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்

Std 22 6-6-47—6-6-48

# சைவக் கிரியை விளக்கம்

இது சைவ நன்மக்கள் தாம் செய்யும் சமயக் கிரியைகளின் உட் கருத்தையும், நோக்கங்களையும் எடுத்து இலகுவில் விளக்கும் தமிழ் வசன நூலாகும், இதனை எழுதியவர்:

ஆசிரியர், திரு. சு. சிவபாதசுந்தரம், (B.A.) அவர்கள்


இதன் இரண்டாம் பதிப்பு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் வெளியீடாக வுள்ளது.

விலை சதம் 50 (8 அணு)

வண்ணார்பண்ணை 4-11-47

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாசயந்திரசாலை

# உங்கள் சங்கீதக் கருவிகள் பழுதடைந்துவிட்டனவா?



அப்படியானல் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள்
3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய் பழுதுபார்த்துத் தருகிறோம்

[ எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வெகு சகாயம் ]

கஸ்தூரிமோகன்புளுட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, 484, K K. S. ரோட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47 (F)

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற்; சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட, நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கொள்ளலாம்

வேறு செலவு உங்களுக்கு இல்லை

பல நூற்றுக் கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ் செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.

வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன் கோ,
252, காங்கேசன்துறை ரேட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
தந்தி (Srivel) :: : பிராஞ்சு: நாகபட்டணம்.

3) 2—9—47&28-2 48


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday. November 21, 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org